காரணம், அரூரில் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்காக அப்படிச் சொன்னேன். ஆனால் உண்மை நிலையைச் சொல்ல வேண்டுமென்றால் தமிழ்நாட்டில் எங்கேயும் அரசாங்கத்தின் சார்பில் பாலிடெக்னிக் அமைக்கிற உத்தேசம் இல்லை. அதே போல் என்ஜினியரிங் கல்லூரி கூட நாம் ஆரம்பிப்பதாக இல்லை. சென்னையில் மட்டும் ஒன்று ஆரம்பிக்கலாமா என்ற ஒரு எண்ணம் பரிசீலனையில் இருந்து வருகிறது. அதுகுறித்து இன்னும் முடிவு எடுக்கவில்லை.

உதகமண்டலத்தில் உள் விளையாட்டு அரங்கம்.

784—(*வினா எண் 6225) திரு. கே. உச்சி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகமண்டலத்தில் உள் விளையாட்டு அரங்கம் (Indoor Stadium) அமைக்கக் கோரிக்கை மனு ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ): உதகமண்டலத்தில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே அப்படிப்பட்ட கோரிக்கை எதுவும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. உச்சி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது குதிரைப் பந்தய மைதானத்தை அரசு ஏற்றுக் கொண்டிருப்பதால் அங்கே உலக அரங்கில் ஒரு பெரிய விளையாட்டு மைதானத்தை ஏற்படுத்தப் போவதாக நேற்று சட்ட அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதையனுசரித்து அங்கே ஒரு பெரிய ஸ்டேடியம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அதை அரசாங்கம் பரிசீலித்து தக்க முடிவு எடுக்கும்.

தொழுநோய் ஒழிப்புத் திட்டம்.

785—(*வினா எண் 2847) திரு. எம். செல்லமுத்து; திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—